# "நாலாயிரத் திவ்வியப்பிரபந்தத்தில் தத்துவங்கள்"

மதுரை காமராசர் பல்கலைக்கழக முனைவர் (Ph.D.,)
பட்டத்திற்காகத் தன்னாட்சித் தகுதி பெற்ற தியாகராசர்
கல்லூரி வழியாக அளிக்கப்படும் ஆய்வுச் சுருக்கம்


ஆய்வாளர்

**மு. சிவப்பிரியா**

பதிவு எண் : F 9190

நெறியாளர்

முனைவர் **சு. காந்திதுரை**



**மதுரை காமராசர் பல்கலைக்கழகம்**

**(ஆற்றல்சால் பல்கலைக்கழகம்)**

**மதுரை - 625021.**

**ஏப்ரல் - 2019**

# முன்னுரை

## முன்னுரை

இறைவன் உயிர்களின் செருக்கை அடையாளப்படுத்தி அழிவைத் தடுக்கவும், தடுமாறுகின்ற உயிர்களைத் தற்காத்துக்கொள்ளவும் உதவுகின்றான். ஆணவத்தின் உச்சிக்குச் செல்லுகின்ற போது தண்டித்து அருள் பாலிக்கின்றான். மேலும் உயிர்களின் அறியாமையை அகற்றி, ஆன்ம நேயத்திற்கு அழைக்கின்றான். உயிர்கள் ஆன்ம வேட்கையினால் இறைவனை அடையவேண்டி அன்பால் அழுந்தி நிற்கின்றன. இறைவன் உயிர்களின் தன்மைக்கு ஏற்ப, பக்குவ நிலைக்கு ஏற்றாற் போல் அருள்புரிவதை தொல்பழமரபுக் கதைகள் எடுத்துரைக்கின்றன.

தத்துவக் கதைகள் காலங்காலமாக மக்கள் மத்தியில் இறைவனின் வீர தீரச் செயல்களையும், பெருமைகளையும் நினைவுபடுத்துவனவாக இருக்கின்றன. இக்கதைகள் சமயம் சார்ந்த கருத்தை மக்களிடையே கொண்டு செல்லுகின்றன. பிற சமயத்திலிருந்து தன்னை முதன்மைப்படுத்தவும், தமது இறைவனை மேலானவன் என்று உயர்த்திக் காட்டவும் வேண்டிய அவசியம் வைதீக சமயங்களுக்கு ஏற்பட்டது. கடவுளின் தன்மையையும், நிலைப்பாட்டையும் வெளிப்படுத்தத் தத்துவக் கதைகள் பெரிதும் துணை செய்கின்றன. இக்கதைகள் முற்றிலும் பொய்யெனப் புறந்தள்ள முடியாத உணர்வுநிலை சார்ந்த நம்பகத் தன்மையை உள்ளடக்கியதாகும்.

பக்திப் பனுவல்கள் இறைவனுக்குச் சூட்டுகின்ற பாமாலையாகும். இறைவனிடம் அடியவர்கள் அனுபவித்த இன்ப துன்ப உணர்வுகளை இப்பனுவல்கள் பதிவு செய்கின்றன. இறைவனைப்

பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு அவனது அருட் குணங்களை வெளிப்படுத்துகின்றன. இவ்வருட் குணங்கள் தத்துவங்கள் வழியாக வெளிப்படுத்தப்படுகின்றன. இத்தகைய தத்துவத்திற்கான தேவைகளையும் அதன் சிறப்பம்சங்களையும் வெளிப்படுத்துவதாக இவ்வாய்வு அமைகின்றது.

திருமாலின் இறை இன்பத்தில் ஆழ்ந்தவர்களே ஆழ்வார்களாவார்கள். முந்தைய பிறவிகளில் செய்த நல்வினை தீவினைகளை ஒட்டி அவர்களுக்குப் பிறவிகளைக் கொடுத்து முக்திநிலையை அடைவதற்கு இறைவனின் அருள் தேவை. இவ்வருளைப் பெறுவது தன்னலமற்றதும் தன்னை மறந்ததுமான பக்தியாலும் சரண்புகுதல் என ஆழ்வார்கள் விளக்கம் அளித்துள்ளனர்.

திருமால் கோயில் கொண்டிருக்கும் தலங்கள் வைணவத் திவ்விய தேசங்கள் இறைத் தத்துவத்தை பிரதிபலிக்கின்றன. எம்பெருமானாகிய திருமால் கோயில் கொண்டிருக்கும் திருத்தலங்களுக்கு புண்ணியம் செய்வோர் பக்திநிலையை அனுபவிப்பதோடு வைணவத் தத்துவத்திலும் மூழ்கித்திளைக்கின்றனர். தத்துவம் என்பது சிந்தனைகளின் பிரதிபலிப்பு. ஏன்? எதற்கு? எப்படி? என்ற வினாக்களுக்குத் தத்துவ நோக்கோடு பாடியுள்ளனர். உலக அனுபவங்களில் முறையான தத்துவ அறிவு முதிர்ந்த நோக்கினையும், ஆழ்ந்த இறை உணர்வினையும் பாசுரங்களில் காணமுடிகிறது.

ஆழ்வார்கள், ஞானம் தன்னுடைய பகுதிகளான உட்பார்வை, தெளிவு, தொலைநோக்கு எண்ணத்தொகுப்புப் போன்றவைகளால் மனித அனுபவங்களுக்குப் பொருளறிவு வாழ்க்கைக்குப் பயனுள்ளதாகவும் பொருளுள்ளதாகவும் ஆக்குகின்றதை தெளிவுபடுத்தியுள்ளனர்.

உயிர்களைக் காக்கும் பொருட்டே இறைவன் இவ்வுலகில் அவதரிக்கிறான். பிறப்பற்றவனாகிய பெருமான் நம்மை போலக் காக்கும் கர்மவசத்தால் பிறப்பதில்லை. உயிர்களின் மீது கொண்டக் கருணையினாலே பிறக்கிறான். அங்ஙனம் அவன் இவ்வுலகில் பிறவியெடுப்பதுதானும் கிணற்றில் குதிக்கின்ற தாயின் நிலை போன்றதாகும். உயர்வுற உயிர்நலம் உடையவன் திருமாலே என்னும் கருத்துக்கொண்டவர்கள் ஆழ்வார்கள் திருமாலையன்றி தெய்வம் வேறு இல்லை. பன்னிரு ஆழ்வார்களும் இறைவனுக்குச் சொல் மாலைகளில் இறைத் தத்துவங்கள் உண்மை நிலைகள் அறவியற் சிந்தனைகள் குறித்த கருத்துக்கள் ஆய்வு செய்யப்படுகிறது.

## ஆய்வுத் தலைப்பு

"நாலாயிரத் திவ்வியப்பிரபந்தத்தில் தத்துவங்கள்" என்பது ஆய்வுத் தலைப்பாக அமைகிறது.

## ஆய்வின் நோக்கம்

நம் நம்மாழ்வார், திருமங்கையாழ்வார் பாசுரங்களில் கையாளப்பட்டுள்ள தத்துவக் கதைகள் மக்களுக்குச் சமயம் சார்ந்த சிந்தனையை வளர்க்கின்றன. இறைவனின் அவதாரச் சிறப்பை மக்களுக்கு உணர்த்த வேண்டும் என்பதே இப்பாடல்களின் முதன்மையான நோக்கமாகும். சமயம் சார்ந்த கொள்கையில் தொல்மரபுக் கதைகள் இறைவன் மீது பக்தன் பற்றுக்கொள்ள உறுதுணையாக அமைவன. இறைவனின் சிறப்புக்களைப் பரப்பும் சாதனமாக தத்துங்கள் திகழ்கின்றன. மனித சமூகத்தில் தன்னைக் கரைத்துக் கொள்ள வேண்டும் என்று அடியவன் விரும்புகின்றான். அவ்வகையில் தான்பெற்ற பேரின்பத்தை மனித சமூகத்திற்கு நம்மாழ்வார்,

திருமங்கையாழ்வார் வெளிப்படுத்த விரும்புவதன் விளைவே அவர்தம் பாடல்களாகும். இவ்வுலகில் பிறக்கின்ற ஒவ்வொரு உயிர்களும் கர்மபலன்களின் அடிப்படையில் பிறக்கின்றன. அந்தக்கர்மப் பலன்களை ஆழ்வார்கள் தங்களுடைய பாடல்களில் விளக்குவதைக் காணலாம். பக்தி இலக்கியங்கள் மக்களின் மனதை பண்படுத்துவதற்கும், செம்மைப்படுத்துவதற்கும் படைக்கப்பட்டவையாகும். நம்மாழ்வார், திருமங்கையாழ்வார் தங்களுடைய பாடல்களில் தத்துவக் கருத்துக்களைக் கண்டு தெளிவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

## ஆய்வுக் கருதுகோள்

பக்தி இலக்கியம் பலதரப்பு மக்களும் படித்து இன்புறத்தக்க கருவூலமாகும். இவற்றில் கையாளப்படும் தத்துங்கள் மனித மனத்தில் பதிந்தவிட்ட குறியீடாகும். இக்குறியீடு நம்பகத்தன்மை உடையன போலத் தோன்றும். இறைவனின் அவதாரத்தின் வழியாக மக்கள் மத்தியில் காட்சிப்பிம்பத்தை சமயம் உருவாக்கி இருக்கிறது. இப்பிம்பம் மக்கள் மத்தியில் இறைவன் என்ற பெயரில் நம்பிக்கை உடையதாக இருக்கிறது. பன்னிரு ஆழ்வார்களில் நம்மாழ்வார், திருமங்கையாழ்வார் ஆகியோர் பாடல்களில் மனிதன் இவ்வுலகில் இன்பமாய் வாழும் முறையினைத் தத்துவங்களோடு பொருத்திக்காட்டுவதும் அவதாரங்கள் அதிகமாக இடம்பெறுவதையும் அவதாரங்களில் ஆழ்வார்கள் தத்துவத்தை விளக்குவதும் இவ்வாய்வின் கருதுகோளாக அமைகின்றன.

## ஆய்வு எல்லை

இவ்வாய்விற்குப் பன்னிரு ஆழ்வார்களில் நம்மாழ்வார், திருமங்கையாழ்வார் பாடிய 2433 பாடல்கள் எல்லையாக அமைந்துள்ளன.

ஜெகத்ரட்சகன் - நாலாயிரத்திவ்வியப்பிரபந்த உரை நம்மாழ்வார், திருமங்கையாழ்வார் பாடல்களில் காணப்படும் தத்துவங்கள், யோகநிலைகள், அவதாரச் சிறப்புகள் தொடர்பான செய்திகளும் தத்துவார்த்த விளக்கங்களும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

## ஆய்வு அணுகுமுறைகள்

நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தை தத்துவ அடிப்படையில் விளக்குமிடத்து விளக்கமுறைத்திறனாய்வு அணுகுமுறையும் (Discriptive Method), அதனைப் பகுத்து ஆய்வதால் பகுப்பு முறைத்திறனாய்வு அணுகுமுறையும் (Analytical Method), ஆழ்வார்கள் பாசுரங்களில் தத்துவார்த்த நோக்கில் காண்பதால் மெய்மையியல் அணுகுமுறையும் இவ்வாய்வில் மேற்கொள்ளப்பெறுகின்றன.

## ஆய்வு முன்னோடிகள்

பக்தி இலக்கியங்களைப் பற்றி ஆய்வுகள் வெளிவந்து இருப்பினும் தத்துவ நிலைப்பாட்டை வலியுறுத்துகின்ற வகையில் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. இவ்வாய்வுக்குரிய முன்னோடிகளாகப் பின்வரும் ஆய்வு நூல்கள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. சி. லஷ்மணன் "இந்திய தத்துவ ஞானம்" 1960, டி.எஸ். இராஜகோபாலன் "ஆழ்வார்கள் வரலாறு" 1970, து. சீனிவாசனின் "ஆழ்வார்கள் அருளிச் செயலில் இராமன்" (எம்.ஃ.பில் பட்ட ஆய்வேடு, ம.கா.ப.) 1979, கு. தாமோதரன் "திருவாய் மொழித்திறன்" 1981, சு. வேங்கடராமனின் "அறையர் சேவை" 1985, "தமிழ் இலக்கியங்களில் வைணவம்" என இரு நூல்களையும், ம.பெ. சீனிவாசன் "திருமங்கையாழ்வார் மடல்கள்" 1987, "சுவீரா ஜெயஸ்வால் வைணவத்தின் தோற்றமும் வளர்ச்சியும், 1991 எஸ். தோத்தி வைணவம் மர்க்ஸியப்பார்வை. "வைணவ

இலக்கிய வகைகள்" (முனைவர் பட்ட ஆய்வேடு ம.கா.ப.) 1994, "பெரியாழ்வார்" 1999 ஆகிய நூல்களையும் வெளியிட்டுள்ளனர். எஸ். குலசேகரன் "வைணவத்தின் ஆழ்வார்கள் காலநிலை" 1988, இரா. இராமானுஜம் "வைணவ அந்தாதிகள்" என்னும் தலைப்பில் ஆய்வு மேற்கொண்டு 1988 "வைணவ அந்தாதிகள் காட்டும் பக்திநெறி" என நூலாக வெளியிட்டுள்ளார்.

தொ. பரமசிவன் "அழகர் கோயில்" (பி.எச்டி. ஆய்வேடு ம.கா.ப. பதிப்பத்துறை வெளியீடு) 1989, ர. ஜெயந்தி "ஆழ்வார் பாடல்கள் அடைவும் ஓதும் மரபுகளும்" (எம்.ஃபில் ஆய்வேடு ம.கா.ப.) 1990, எஸ்.கே. இராமராசன் "ஆழ்வார்களும் கம்பனும்" 1992 என்ற நூல்களை வெளியிட்டுள்ளனர். இந்திராபார்த்தசாரதியின் "தமிழ் இலக்கியங்களில் வைணவம்" 1992, தி. அரங்கநாதனின் "ஆழ்வார்கள் அருளிச் செயலில் அவதாரங்கள்" 1997, சி. பொன்னுத்தாயின் "தொன்மக்கதைகள் - பன்முகநோக்கு" 1993, அம்பை மணிவண்ணன் "பாண்டிய நாட்டு வைணவ கோயில்" 1999, ப. சுப்பிரமணியன் "கம்பரின் கடவுட் கோட்பாடு" (திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக பி.எச்டி. ஆய்வேடு) 2001, சு. வேங்கடராமன், தமிழ் வளர்த்த வைணவம். சி. நீலகண்டன், நாலாயிரத்திவ்வியப் பிரபந்தத்தில் உடல்மொழி, 2006, பொன்னி, பன்னிரு ஆழ்வார்களின் பக்திநிலை, 2010, சு. பரணி, நாலாயிரத் திவ்வியப்பிரபந்தத்தில் தொன்மக்கூறுகள் 2009 ஆகிய நூல்கள் இலக்கிய திறனாய்வுகளும் பிற நூல்களும் ஆய்வுகளும், இவ்வாய்விற்கு முன்னோடியாகத் திகழ்வனவாகும்.

## முதன்மைச் சான்றாதாரங்கள்

ஆழ்வார்களின் நாலாயிரத் திவ்வியப்பிரபந்தத்தில் உள்ள பாசுரங்களை முதன்மை ஆதாரமாகக் கொண்டு இவ்வாய்வு அமைகின்றது (ஜெகத்ரட்சகன் - நாலாயிரத்திவ்வியப்பிரபந்த உரை, 1998).

## துணைமை சான்றாதாரங்கள்

பக்தி இலக்கியத் திறனாய்வு குறித்த நூல்களும், பக்தி இலக்கியம் குறித்த ஆய்வேடுகளும், கட்டுரைகளும், ஆய்வுக் கோவைகளும், சமயம் தொடர்பான தத்துவார்த்த விளக்கங்கள் அடங்கிய நூல்களும், பக்தி அனுபவத்தேடல்குறித்து விளக்கும் நூல்களும் துணைமை ஆதாரங்களாகக் கொள்ளப்பெறுகின்றன.

## இயல் பகுப்புகள்

**“நாலாயிரத் திவ்வியப்பிரபந்தத்தில் தத்துவங்கள்”** என்ற இவ்வாய்வு முன்னுரை, முடிவுரை நீங்கலாக நான்கு இயல்களாகப் பகுக்கப்பட்டுள்ளது, அவை:

1. நாலாயிரத் திவ்வியப்பிரபந்தத்தில் வாழ்வியல் தத்துவங்கள்.
2. நாலாயிரத் திவ்வியப்பிரபந்தத்தில் யோகநிலைத் தத்துவங்கள்.
3. நாலாயிரத் திவ்வியப்பிரபந்தத்தில் அவதாரங்களும் தத்துவச் சிறப்புகளும்.
4. நாலாயிரத் திவ்வியப்பிரபந்தத்தில் திவ்ய தேசங்களும் சிறப்புகளும்.

என அமைந்துள்ளன.

**"முன்னுரை"யில்** ஆய்வுத் தலைப்பு, ஆய்வின் நோக்கம், ஆய்வு கருதுகோள், ஆய்வு எல்லை, ஆய்வுச் சான்றாதாரங்கள், ஆய்வு அணுகுமுறைகள், இயல்பகுப்பு ஆகியவை முன்னுரையில் இடம்பெறுகின்றன.

**"நாலாயிரத் திவ்வியப்பிரபந்தத்தில் வாழ்வியல் தத்துவங்கள்"** என்ற முதல் இயலில் மனிதனுக்கு ஏற்படுகின்ற வாழ்வியல் இன்ப துன்ப அனுபவங்களை தத்துவங்களோடு பொருத்திக் காண்பதும் அறத்தில் தத்துவம், அறத்தின் இயல்புகள், பக்தியில் தத்துவம், பக்தியில் தத்துவத்தின் பொருள், படைப்பின் தத்துவக் கூறுகள், இனம் இனத்தோடு சேரும், படைப்பு ஒன்று நோக்கம் பல, சமுதாயத் தத்துவம், சமுதாய நிலை, பிறப்பின் தத்துவம், தத்துவம் குறித்த சமூகத்தின் புரிதல், மானிடத்தின் தத்துவம், சரணாகதி தத்துவம், அன்பு சரணாகதி, ஆன்ம நேயத்தில் தத்துவம், நிலையாமை, நிலையாமையின் உட்பிரிவுகள், வாழ்க்கை நிலையாமை, செல்வம் நிலையாமை, வைணவ விளக்கம், வைணவத்தில் மோட்சம், வைணவ ஆச்சாரியர்கள், வேதங்களில் வைணவம், ரிக் வேதத்தில் வைணவம், யஜுர் வேதத்தில் வைணவம், சாம வேதத்தில் வைணவம், அதர்வண வேதத்தில் வைணவம், திருமண், திருமண் காப்பில் இடம்பெறும் ஸ்ரீசூரணம், சூரணம் இட்டுக் கொள்வதில் வழிமுறைகள், வைகுண்டத்தை அடையும் வழிகள், யாக்கை நிலையாமை, ஆன்ம நேயம் ஆழ்வார்கள் மனிதனுக்கு ஏற்படும் துன்பங்களை இறைத்தத்துவத்தோடு ஆராய்வதாக இவ்வியல் அமைந்துள்ளது.

**"நாலாயிரத் திவ்வியப்பிரபந்தத்தில் யோகநிலைத் தத்துவங்கள்"** என்ற இரண்டாம் இயலில் யோகம் -விளக்கம், பகவத்கீதையில் யோகம், யாகம், யோகமும் தவமும், யோக நித்திரை, அஷ்டாங்கயோக நிலைகள், யோக நெறியில் போன்றவற்றை ஆராய்வதாக இவ்வியல் அமைந்துள்ளது.

**"நாலாயிரத் திவ்வியப்பிரபந்தத்தில் அவதாரமும் தத்துவச்சிறப்புக்களும்"** என்ற மூன்றாம் இயலில் அவதாரம், திவ்வியப் பிரபந்தத்தில் அவதாரங்கள், அவதாரமும் பகவத்கீதையும், திருமங்கையாழ்வார், நம்மாழ்வாரும் பிற ஆழ்வார்களும், திருமாலின் பன்னிரு நாமங்கள், இறைநிலைத் தத்துவங்கள், மச்ச அவதாரம், கூர்ம அவதாரம், வராக அவதாரம், நரசிம்மவாதாரம், வாமன அவதாரம், பரசுராமர் அவதாரம், இராமவதாரம், இராவண வதம், பலராமர் அவதாரம், கிருஷ்ண அவதாரம், கல்கி அவதாரம், பிரகலாதன் பிறப்பு இரணியனின் ஆத்திரமும் அழிவும் உலகியல் உண்மைநிலையினை விளக்க இறைவன் நடத்திய அவதாரங்களைத் தத்துவத்தோடு ஆராய்வதாக இவ்வியல் அமைந்துள்ளது.

**"நாலாயிரத் திவ்வியப்பிரபந்தத்தில் திவ்வியதேசங்களும் சிறப்புகளும்"** என்ற நான்காம் இயலில் இறைவன் திருக்கோலத் திசைகள், தலவரலாறு எம்பெருமானாகிய திருமால் கோயில் கொண்டிருக்கும் திருத்தலங்களின் அற்புதங்களைத் தத்துவத்தோடு ஒப்பிடுவதை ஆராய்வதாக இவ்வியல் அமைந்துள்ளது.

**"முடிவுரை"** என்னும் பகுதியில் ஆய்வில் கண்டறிந்த முடிவுகள் தொகுத்துத்தரப்பட்டுள்ளன.

**"துணைநூற்பட்டியலில்"** இவ்வாய்விற்குத் துணைபுரிந்த நூல்கள், கட்டுரை, ஆய்வேடுகள், ஆய்வுமலர்கள், அகராதிகள் ஆகியன அகரவரிசைப்படி தொகுத்துத்தரப்பட்டுள்ளன.

**"பின்னிணைப்பில்"** இவ்வாய்வு தொடர்பான விளக்கப்படங்களும் ஆய்வுக்கு அரண் சேர்க்கின்ற வகையிலும் ஆய்வு தொடர்புடைய செய்திகளும் இடம்பெறுகின்றன.

❀❀❀❀❀